அமரர்

# வே. திருஞானசம்பந்தமூர்த்தி

## (V.T.S. Moorthy)

அவர்களுக்கு

# நினைவு அஞ்சலி

October 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனனம்
*12.11.1935*

மரணம்
*20.09.2006*

ஓம் சிவாய நம
விணாயக துதி

முன்னவனே யானை முகத்தவனே முத்தி நலம்
சொன்னவனே தூய்மெய் சுகத்தவனே - என்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின் தாழ் சரண்

- திருவருட்பிரகாச வள்ளலார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

## திருஞானசம்பந்தர்

வானவர்கள் தானவர்கள் வாதைபட
வந்த தொரு மா கடல் விடம்
தானமுது செய்தருள் புரிந்தசிவன்
மேவுமலை தன்னைவினவில்
ஏனமின மாளினொடு கிள்ளை தினை
கொள்ள வெளிலார் கவணினால்
கானவர்தம் மாமகளிர் கனகமணி
விலகு காழத்திமலையே

## திருநாவுக்கரசர்

மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்பாடிப்
போதொடு நீச்சுமந் தேந்திப் புகுவாரவர் பின் புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமல் ஐயா றடைகின்றபோது
காதல் மடப்பிடியோடும் களிறுவருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதங் பாதங் கண்டறியாதன கண்டேன்

## சுந்தரமூர்த்தி நாயனார்

பொன்னும் மெய்ப் பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானை
பின்னை என் பிழையைப் பொறுப்பானைப்
பிழை எலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மானை எளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற் பழத்தணி
ஆரூரானை மறக்கலுமாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்க வாசக சுவாமிகள்

## திருவாசகம்

நானே யோ தவம் செய்தேன் சிவாய நம வெனப் பெற்றேன்
தேனாய் இன் அமு தமுமாய் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்தென துள்ளம் புகுந்து அடியேனுக்கு அருள் செய்தான்
ஊனாருவம் உயிர் வாழ்க்கை பொறுத்தன்றோ வெறுத்திடவே

ஏக நாயகனை இமையவர்க்கரசை என்னுயிர்க்கமுதினை எதிரில்
போகநாயகனைப் புயல் வணற் கருளிப் பொன் நெடுஞ்சிவிகையாவூர்ந்த
மேக நாயகனை மிகுதிவீழி மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோகநாயகனை யன்றி மற்றென்றும் உண்டென உணர்கிலேன் யானே

## திருப்பள்ளியெழுச்சி

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணிதுணை மலர்கொண்
டேற்றிநின் றிருமுகத் தெமக்கருண் மலரும்
எழினகை கொண்டு நின் றிருவடி தொழுகோஞ்
சேற்றிதழ்க் கமலக்கண் மலருந்தன் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
எற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

## திருவெம்பாவை

ஆதியு மந்தமு மில்லா வரும் பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டங்கண்
மாதே வளருதியோ, வன்செவியோ நின்செவிதான்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்கண்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னே யென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே— எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடிபோற்றி எந்தையடி போற்றி
தேசனடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன்தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டுணர்வார் தன்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும்வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே*
*கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே*
*நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே*
*தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே*
*அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று*
*சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்*
*சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்*
*செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்*
*பல்லோரும் ஏத்தப் பணிந்து.*

திருச்சிற்றம்பலம்

## திருவிசைப்பா - திருமாளிகைத்தேவர்

நீறணி பவளக்குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவனபோகமே! யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடைபெம் அற்புதக் கூத்தா!
அம்பொன்செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனேன் இசைமாறிசையே

## திருப்பல்லாண்டு - சேத்தனார்

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சில தேவர் சிறு நெறி சேராமே
வில்லாண்டகனகத்திரள் மேருவிடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங் கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம் - சேக்கிழார்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அருளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்து வீகமே ஆக
இந்து வாழ் சடையான் ஆடும் அனந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்த பேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்

## திருப்புகழ் - அருணகிரிநாதர்

காமியத் தழுந்தி இளையாதே
காலர்க்கைப் படிந்து மடியாதே
ஓ மெழுத்தி லன்பு மிகவூறி
ஓவியத்திலந்தம் அருள்வாயே
தூம மெய்க் கணிந்த சுகலீலா
சூரனைக் கடிந்த கதிர் வேலா
ஏம வெற்புயர்ந்த மயில் வீரா
ஏரகத் தமர்ந்த பெருமானே

## திருமந்திரம் - திருமூலர்

நமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன்
சிவன்வரின் நானுடன் போவது திண்ணமே
பவம்வரும் வல்வினை பண்டே யறுத்தேன்
தவம்வரும் சிந்தைக்குத் தான் எதிராரே

மாயநட் போரையும் மாயாமலமெனும் மாதரையும்
வீயவிட் டோட்டிவெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்று பின்றாதையைக் கூடிப்பின்றாயை மறந்
தேயும் தேறிட்டையென்றா னெழிற்கச்சி யேகம்பனே.
(பட்டினத்தார்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயுமாண சுவாமிகள்
### திருப்பாடல் திரட்டு

புலன் ஐந்தும் தானே பொர மயங்கிச் சிந்தை
அரமந்து உழலும் அடிமை - நலம் மிகுந்த
சித்து ஆன மோன சிவனே! நின் சேவடிக்கே
பித்து ஆனால் உண்டோ பிறப்பு?

## திருவருட்பா
### அருட்பிரகாசவள்ளலார்

வெட்டை மாட்டி விடாப்பெருந்துன்பநோய்
விளைவதெண்ணிலர் வேண்டிச்சென்றே தொழுக்
கட்டைமாட்டிக் கொள்வார் என வேண்டிப் பெண்
கட்டை மாட்டிக் கொள்வார் தங்கழுத்திலே
துட்டை மாட்டின் கழுத்தடிக் கட்டையோ
துணிக்கும் கட்டைய தாம் இந்தக்கட்டைதான்
எட்டை மாட்டி உயிர் விடக் கட்டைமேல்
ஏறும்போதும் இழுக்கின்ற கட்டையே

இருவினைச் செயல்கள் ஒப்பின் ஈசன் தன் சத்திதோபக்
குருஅருள் பெற்றுஞான யோகத்தைக் குறுகிமுன்னைத்
திரிமலம் அறுத்துப் பண்டைச் சிற்றறிவு ஒழிந்து ஞானம்
பெருகிநா யகன்தன் பாதம் பெறுவது சுத்தமாமே.
(திருஞானசித்தியார்)

## வான் சிறப்பு (புராணம்)

வான்முகில் வளாது பெய்த மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நன்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லம்

நமப் பார்வதி பதயே - ஹரஹர மகாதேவா (3)
தென்னாடுடைய சிவனே போற்றி - எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க - எல்லோரும் வாழ்க
சிற்சபேசா - சிவசிதம்பரம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sai Bajans

Ganesha Sharanam, Sharanam Ganesha
Saiisha Sharanam, Sharanam Saiisha.

Avo Sai Narayana Darshana Dijo
Tuma Ho Jagata Key Data Tuma Ho Jagata Key Data
Tumhi Ho Rama Tumhi Ho Krishna
Tumhi Ho Krishna Tumhi Ho Rama
Tumhi Ho Vishwa Vidhata Tumhi Ho Vishwa Vidhata
Tumhi Ho Brahma Tumhi Ho Vishnu
Tumhi Ho Vishnu Tumhi Ho Brahma
Tumhi Ho Shankara Rupa Tumhi Ho Shankara Rupa.

Govinda Krishna Jai Gopala Krishna Jai
Gopala Bala Bala Radha Krishna Jai.
Krishna Jai, Krishna Jai, Krishna Jai
Krishna Krishna Krishna Krishna Jai.
Gopika Mala Hari Pyari, Mayi Mira Mana Vihari,
Madana Mohana Murali Dhari Krishna Jai, (Krishna Jai)
Krishna Jai Rama Krishna Jai Radha Krishna Jai
Bala Krishna Krishna Krishna Krishna Jai.

Manasa Bhaja Rey Guru Charanam
Dustra Bhava Sagara Taranam
Guru Maharaj Guru Jai Jai
Sai Natha sad Guru Jai Jai
Sai Natha Sath Guru Jai Jai
Om Namah Shivaya Om Namah Shivaya
Ohm Nama Shivaya Ohm
Arunachala Shiva Arunachala Shiva
Arunachala Shiva Aruna Shiva Ohm
Omkaram Bhava Omkaram Bhava
Omkaram Bhava Om Namo Baba.

Sathyam Dharmam Sai, Shanthi Premai Sai
Charanam Charanam Sai, Sashtanga Charanam Sai
Ramam Krishnam Sai, Sai Sundaram Rupam Sai (Charanam)
Nadam Rupam Sai, Geetam Vedam Sai (Charanam)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A few drops of the ocean of Sathya Sai Baba's teachings:

**Sathya Sai Baba urges mankind to Believe in God – for there is only ONE GOD for all mankind, though He may be called by many names.**

* * * * * *

Follow sincerely their respective religions and live their daily lives in consonance with the teachings of good behaviour and morality. Respect all other religions – for no religion advocates the negative and lower qualities of man.
Perform selfless service to the poor, the sick, and the needy without thought of reward or fame. Cultivate in their lives the values of truth, divine love, right conduct, peace, and non-violence and promote these values among all. Be patriotic and respect the laws of the country in which they live.

* * * * * *

If there is righteousness in the heart, there will be beauty in the character.
If there is beauty in the character, there will be harmony in the home. If there is harmony in the home, there will be order in the nation. When there is order in the nation, there will be peace in the world.

* * * * * *

THE Karma or activity is the indicator of inner character. Observing one's actions, their motives, their consequences and the extent of one's involvement, it is possible to declare one as a Pasu (beast) or Pasupathi (The Lord of Individual Souls: that is to say, as Divine as God Himself). Humanness is very sacred. There is no greater force than humanness. Man has to pursue two kinds of education: Education and Educare.
Education is acquiring knowledge from textbooks written by someone else.
Educare is bringing out or manifesting the human values of sathya (truth), dharma (righteousness), santhi (peace), prema (love, and ahimsa (non-violence) by sadhana.
The first of five human values is sathya, manifesting from one's own heart.
The second value is dharma (righteousness). Sathyannasthi paro dharmah (there is no dharma greater than adherence to truth).Dharma originated from sathya.
The third value is santhi (peace). Peace is not something that a person passes on or gives in charity to another person. It has to come from one's own heart. Today, wherever you look, you see "only pieces, no peace".
The fourth value is prema (love). Love is your very life-breath. Devoid of love, the world cannot exist.
The fifth human value is ahimsa (non-violence). Gautam Buddha taught, Ahimsa paramo dharmah (non-violence is the supreme dharma).
The five human values are not independent of each other. They closely follow one another. These five qualities are the gift of God to a human being.
You as human beings have to manifest these five human values by putting them into practice. That is "Educare".

* * * * * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

My earliest memory of my father is of him playing a practical joke on my brother and I. Amongst family and friends my father always liked to tell jokes, both good and bad but you always laughed. To me this was his most endearing quality, his ready smile and sense of humour.

My father was traditional and education was very important to him. He made the most of the doors that education opened for him. He encouraged my brother and me to ensure that we fulfilled our potential. Every time I used to sit and talk to dad, the first question he would ask me was whether I was keeping up to date with my reading! I know that he and my mother were proud of what my brother and I have achieved.

Dad was extremely generous and kind. I heard at his funeral some stories of dad's generosity from his friends. I never realised how many lives that he had touched and how modest he was regarding these acts. He said that one should never expect any reward for these acts apart from the sense of well-being it brings.

I have been very grateful for the many friends and family who have been a source of support since my father's passing. I have enjoyed the chance to listen to stories about my father from his youth and younger days, which have helped me, know my father even better.

I will be forever grateful to my father for the sense of duty, work ethic and sense of humour that he instilled in him. I hope that, I will live up to the legacy that he has left.

***Ram Pragash Moorthy***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Growing up – he was always just my dad, but the last few weeks have taught me a lot about my father that I never knew.

To me, he was someone who laboured tirelessly to make us who we were and give us the kind of opportunities that he never had.

Education was always important to both my parents. So seeing all that hard work pay off with his two sons graduate from good universities and enter their chosen careers was a source of pride to him, no doubt.

However, I never expected to see so many well wishers at my dear dad's funeral and visiting us the week before, to comfort us.

In a way, I took his efforts for granted, I suppose, since we were his family. The wealth of stories about him from his friends and contemporaries were something I never expected, and realising how many lives he touched is something that dulled the immense pain I felt at his loss.

Therefore, I would like to thank you – one and all- for being part of this memorial service and sharing your memories with us.

***Prasant Yogan Moorthy***
***Brisbane, Australia***
***October 2006.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாமாகி நின்ற அண்ணர்

எனது குடும்பத்தை தலை எடுக்க வைத்த எம் அண்ணா. விவசாயக் குடும்பத்தில் பிறந்த எம்மை உயர்த்தி விளங்க வைத்தவர். மூன்று சகோதரிகள், மூன்று சகோதரன்கள் என எம்குடும்பம் பெரிது. இன்னும் ஒரு சகோதரி ஏற்கனவே பிரசவத்தின் போது இறந்துவிட்டார்.

எம்மை பள்ளிக்கு அழைத்துச் சென்றவர். வீட்டில் படிப்புச் சொல்லித் தந்தவர். தான் 5ம் வகுப்புப் புலமைப் பரீட்சையில் சித்தி பெற்று பாடசாலை மாறி வசாவிளான் மத்திய மகா வித்தியாலய விடுதியில் தங்கிப் படித்தபோது எங்கள் படிப்புக்கு ஊக்கம் தந்தவர். உயர் வகுப்பு நான் படிக்கும் போதும் என்னை கொழும்புக்கு அழைத்து விஷேட படிப்புப் பெற வைத்தவர். தான் லண்டன் சென்ற பின்பும் தனது அறிமுகத்தில் கொழும்பில் உள்ள பிரித்தானியக் கொம்பனியில் வேலை பெற்றுத் தந்தவர்.

அவர் திருமணம் செய்த பிறகும் எமது குடும்பத்திற்கு அண்ணியுடன் இணைந்து தொடர்ந்து உதவியவர். என்னை எட்டு மாதங்கள் லண்டனுக்கு அழைத்து ஒரு தொகைக் காசை உழைக்கவும் மேலதிக வேலைப் பயிற்சி பெறவும் உதவியவர். எமது திருமணங்கள் பிள்ளைகள் படிப்பு வெளிநாடு வர உதவி என எல்லாவற்றிலும் அவர் பங்களிப்பே உச்சம்.

ஊர் உலகம் மெச்ச எம்மை உயர்த்திய ஒளி நட்சத்திரம் மறைந்த துயரம் நெஞ்சில் நீங்காது. இறுதிவரை அண்ணருக்கு உறுதுணையாக நின்ற அண்ணி, பெறாமக்களைப் பார்த்து ஆறுதல் அடைவோம்.

*தம்பி இரத்தினம் (சுப்பிரமணியம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பின் அண்ணா

45 ஆண்டு காலமாக இலண்டன் மாநகரில் பேரோடும் புகழோடும் வாழ்ந்தீர்கள். எல்லோராலும் **"மூர்த்தி அண்ணா"** என்று அழைக்கப்பட்டீர்கள். ஆனால் எனக்கோ எனது மூத்த அண்ணனான நீங்கள் என்னை தாய் தந்தை போல அன்பாக வளர்த்தீர்கள். என் தேவைகள் அறிந்து பூர்த்தி செய்தீர்கள். இதற்கு உரிய கடைமைகளை செய்யவென நான் காத்திருந்த நேரமதில் கயவர்கள் வஞ்சகத்தால் கதி-கலங்கிப் பிரிந்த வேளையிலே காலன் உங்களைப் பிரித்தான்.

அண்ணா - இது காலத்தின் விதியோ எனக் கலங்கித் தவிக்கிறேன் அண்ணா. எங்கள் குடும்பத்தின் மூத்த குலக் கொழுந்தே என்னைக் கடைக்குட்டியென நினைத்து சீராட்டி பாராட்டி சிறிதும் குறையில்லாமல் வளர்த்தவரே, என்னைப் பார்க்காமல் கடமைகள் முடிந்ததென இப்போது மட்டும் ஏன் குறை வைத்துச் சென்றீர்கள்?

தேற்றுவார் யாருமின்றி தேறவும் வழியுமின்றி உன் தம்பி நான் தேம்புகிறேன் என்றென்றும் உன் நினைவால். சத்திய சாயிபாபாவின் பக்தனே உங்கள் ஆத்மா எங்களை வழி நடத்திக் கொண்டிருப்பதாக எண்ணி உன் பாதம் இறைஞ்சி உங்களை வணங்குகிறேன்.

இறைவனின் சிம்மாசனத்தை நீங்கள் அடைந்து உமது
ஆத்மா சாந்தியடைய
என்றென்றும் பிரார்த்திக்கும்
***உங்கள் அன்புத் தம்பி***
***நகுலேஸ்வரன்***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகை நிறைந்த அண்ணர் மூர்த்தி

*-நாக சிறிகெங்காதரன்*

தெல்லிப்பளைக் கிராமத்தின் ஒரு பகுதியான பன்னாலையிலிருந்து இந்த மண்ணிற்கு வந்த முதல் மனிதர் திரு வேலாயுதம் திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களாவார். 1935ம் ஆண்டு நவம்பர் மாதம் 12ம் திகதி திரு மூர்த்தி அவர்கள் பன்னாலை கதிரேசு வேலாயுதம் - தங்கப்பிள்ளை தம்பதிகளின் தலைமகனாகப் பிறந்தார். நான்கு சகோதரிகள் இரண்டு சகோதரார்கள் இவரது உடன்பிறப்புக்கள். பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியை முடித்தபின் புலமைப்பரிசில் பெற்று வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்விகற்றார். பின்னர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் உயர்தர வகுப்புவரை படித்த இவர் கொழும்பு வந்து சுமார் பத்தாண்டுகள் தொழில்புரிந்தார்.

1963 ஆண்டு உயர்கல்வியையும் தொழிலையும் நோக்கமாகக் கொண்டு இங்கிலாந்திற்கு வந்தார். எழுபதுகளின் நடுப்பகுதியில் ஜோ என அழைக்கப்படுகின்ற கருணேஸ்வரியைத் திருமணம் செய்து 1975 இல் ராம் பிரகாஷ் என்ற மகவிற்கும் 1976இல் பிரசாந் யோகன் என்ற மகவிற்கும் தந்தையானார். சமய நம்பிக்கையும் சமூக அக்கறையும் கொண்ட திரு மூர்த்தி அவர்கள் தனது புத்திரர்களின் உயர்வு கண்டு மகிழ்ந்தார். பிள்ளைகளின் உயர்வின் சந்தோஷத்தை முழுமையாக அனுபவிக்க முடியாதவாறு 1994ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் நோய் இவரைத் திடீரெனத் தாக்கியது. பன்னிரண்டு ஆண்டுகள் நோயின் விளைவாக, நடக்க முடியாத மனிதராக இவர் இருந்தமை மிகப்பெரிய கொடுமை. புன்சிரிப்புடனேயே எப்பொழுதும் காட்சிதரும் திரு மூர்த்தி அவர்கள் மிக உயர்ந்த தோற்றம் கொண்ட அழகான மனிதர். உடல் நலத்தில் மிகுந்த கவனம் செலுத்தி தனது தோற்றத்தை அளவாக வைத்திருந்தவர். அவர் அடிக்கடி எனக்குச் சொல்லுவதை நினைத்துப் பார்க்கிறேன். அதிகமாகச் சாப்பிட்டு உடம்பு பெருத்து பின்னர் அதைக் குறைப்பதற்காக உடற்பயிற்சியைச் செய்வதைவிட அளவாகச் சாப்பிட்டு உடல்வாகை அளவாக வைத்திருப்பது சுலபமானது என்பார். இதை இவர் சொன்னதை விட, நோய் இவரைத் தாக்கும்வரை தானும் ஒழுங்காகக் கடைப்பிடித்தார்.

திரு மூர்த்தி அவர்களுடைய குடும்பத்தை எனக்கு நீண்டகாலமாகத் தெரியும். ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். சுந்தரக்கா என அன்பாக எல்லோராலும் அழைக்கப்பட்ட இவருடைய தாயார் மகாஜனக் கல்லூரிக்கு அருகிலுள்ள எனது வீட்டின் முன்னால் உள்ள வயற்காணியில் நீண்டகாலமாக கமம் செய்தவர். நான் இளைஞனான வேளையில் அம்பனைச் சந்தியின் இளைஞர் கூட்டத்தில் நானும் இவரின் கடைசித் தம்பி நகுலேஸ்வரனும் உறுப்பினர்கள். இதன் காரணமாகவே நான் 1975ஆம் ஆண்டு இங்கு வருவதற்கான விமானச்சீட்டினை தனது தம்பியாரின் வேண்டுகோளை ஏற்று அனுப்பி உதவினார். 1975ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கிறிஸ்மஸ் விடுமுறையின் போது முதன்முதலாக இவரைக் காண்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது வசித்துவந்த பாணற் என்ற இடத்திற்குச் சென்றேன். ராம் பிறந்து சில மாதங்களே ஆகியிருந்தது. அன்று தொடங்கிய அந்த நட்பு கடந்த முப்பத்திரண்டு ஆண்டுகளாகத் தொடங்குகிறது.

விடுதலைப் போராட்டத்திற்காக இயக்கங்கள் பல இந்த மண்ணிலேதான் உருவாகின. இன்னும் பலவற்றின் வளர்ச்சிக்கான தண்ணீர் இங்கேதான் பாச்சப்பட்டது. விடுதலைப்போராட்டத்தோடு மிக நெருங்கிய ஈடுபாடுகொண்டிருந்த பிரபல தொழிற்சங்கவாதியும் இடதுசாரியுமான அமரர் கே. சி. நித்தியானந்தாவும் ஈழப்புரட்சி அமைப்பினை உருவாக்கிய தோழர் இரத்தினசபாபதியும் இவரின் நண்பர்கள். இதனால் சிலகாலமே இயங்கிய, திரு அன்ரன் பாலசிங்கத்தை இந்த மண்ணில் தமிழ் அரசியலுக்கு அறிமுகப்படுத்திய தமிழர் விடுதலை இயக்கத்துடனும் ஈழப்புரட்சி அமைப்புடனும் ஆதரவான தொடர்பினைக் கொண்டிருந்தார்.

தனது கல்லூரியான தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு இங்கே ஒரு பழைய மாணவர் சங்கம் உருவாகிய வேளையில் அதனைத் தலைமை தாங்கி நடாத்தியவர் திரு மூர்த்தியாவார். இங்கே கோவில்கள் ஆரம்பிக்கப்பட்ட வேளைகளில் அவற்றிற்கு தார்மீக ரீதியான ஆதரவினை நல்கினார். இறுதிவரை மிகுந்த சமயபக்தராக விளங்கிய இவர் சாயிபாபாவில் அபரிதமான நம்பிக்கை கொண்டவர். எண்பதுகளின் இறுதிப்பகுதியில் தமிழ்மக்கள் பல்லாயிரக்கணக்கில் இங்கு அகதிகளாக வந்து இயங்கிய வேளையில் அவர்களுக்கு விம்பிள்டன் பிள்ளையார் கோவிலின் அமரர் இரத்தினசிங்கத்துடன் சேர்ந்து மிகுந்த உதவிகளை வழங்கினார். பல குடும்பங்கள் இங்கு தங்களின் கால்களை மிகப் பலமாக பதிப்பதற்கு உறுதுணையாக இருந்தார். சமூகத்திற்கு இவரது பங்களிப்பு காத்திரமானது.

திரு மூர்த்தி அவர்களுடனும் அவருடைய மனைவி பிள்ளைகளுடனும் மிக நெருங்கிய நட்பை என்னுடைய சகோதரர்களும் கொண்டிருந்தோம். அவருடைய உறவினர்களே பொறாமைப்படத்தக்க அளவிற்கு எங்களுடைய நட்பு இருக்கின்றது. நோய்வாய்ப்பட்டு உடற்கஷ்டத்தை அனுபவிக்கின்ற வேளைகளில் என்னை அழைக்குமாறு அவருடைய மனைவியைக் கேட்பார். ஆனாலும் அவருடய இறுதி நாட்களில் நான் அருகில் இருக்க முடியாமல் போனது கவலையைத் தருகின்றது. கார் விபத்தில் காலமான, எனது பெறாமகனின் மரணச்சடங்கில் கலந்து கொள்ளவென நான் கனடா சென்றிருந்தேன். அங்கேயிருந்த வேளையில் எனக்கு இவருடைய மனைவியின் தொலைபேசி அழைப்பு துயரச்செய்தியைச் சொல்லியது.

"அண்ணர்" என அன்பாக அழைத்த நல்ல மனிதனின் இழப்பு எங்களை வாட்டுகின்றது. அண்ணரின் துயரினால் வாடுகின்ற குடும்பத்துடனும் நண்பர்களுடனும் எனது கவலையைப் பகிர்ந்து கொள்ளுகின்றேன்.

***லண்டன் 05-10-2006***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EULOGY by James Pyke

It was exactly 40 years ago that I first met my friend, Sam Moorthy. I was in the Tube on my way home. Sitting opposite me was a young Sri Lankan reading a book – The Law of Contract. I knew a new edition had been published a few weeks back but I did not know if I should tell him. So I said to myself that if he got off at the same Station, I would approach him. He did; and this is how we met and we became lifelong friends. Let me tell you about my friend.

Gentle person, tranquil with a quiet sense of humour (all his jokes were innocent), he believed in fair play, hardworking and conscientious in everything he did, religious and a family man.

Today everyone wants to invest in properties. Sam did it 35 years ago. Sam would have been a very wealthy man, but he had one flaw in his character – he was not interested in money.

As his lawyer, I would be mad at him. He would not sue defaulting tenants cause he did not want to evict them; and when he was selling, he would reduce the price if he heard a hard luck story, especially from a first time buyer. Sam was the kindest person you could meet. An example from many years ago was the time when Gen Amin evicted the Ugandan Asians. I got a call from Zanzibar – an Indian Bank Manager with wife and 7 children. He had obtained visas for this Country but did not know anyone and had nowhere to go.

I asked Sam for help and he said a tenant had just moved out and he had an empty house in Barnet.

We met the family at the house; and understandably the 1st question they asked was "what is the rent?". Sam replied that there was no rent to pay until they had settled down and found employment. This was even though he had a Buy to Let Mortgage. A few years ago a young man approached me at a Party. He was one of the 7 children. He told me that his late father was a very stiff man – he never showed his emotions. But that day when Sam left the Barnet house, his father broke down – tears of relief that his family had found a home; and tears of joy for the kindness of a stranger. As a Catholic, I am reminded of the words of Jesus " Blessed are the kind for theirs is the kingdom of heaven".

Just over 10 years ago as you all know, Sam suffered a stroke. When I saw him I said "My dear friend, life is so unfair to do this to you". He told me "Jimmy, you cannot say this – I have been lucky in other ways". His greatest luck was meeting and marrying Jo; and my dear friend considered himself lucky also to have his two boys, of whom he was immensely proud. As we say goodbye to Sam today, all our memories of him are good ones.

**RIP**

*(read at Moorthy's funeral on 25th September 2006).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமை எளிமை பசுமை இவற்றின் இணைவு பன்னாலை. யாழ்ப்பாண மாவட்டம் தெல்லிப்பழை பிரதேசம். பன்னாலை இந்த பிரதேசத்தின் பெருமைக்குரிய கிராமம். ஓரமாக ஓங்கி நிற்கும் மகாஜனாப்பள்ளி ஒய்யாரமாக பரந்திருக்கும் அம்பனைதோட்டவெளி இடையே கருகம்பனையை இணைக்கும் பாதை. பன்னாலை மையத்தை பின்னி வளையும் வீதி அமரர் வேலாயுதம் என்னும் மூர்த்தி அண்ணர் குடும்ப வீடு அமைந்த வீதி.

பாலி பருவத்தில் நான் பார்த்த அந்த வீடு. முன்னாலே தலைவாசல் எனப்படும் கொட்டகை. சுற்றிவர வெங்காயப்பிடிகள். நீளத்துக்கு உயரக் கட்டித் தொங்கவிடும் கருவிகள் வீட்டில் எங்கும் நிறைவாய். சுந்தரப் பெரியாச்சி அமரரின் அம்மா. உழைப்பே உருவமாக கொண்டவர். இறுகச் சுற்றிய லங்கா சேலை. வெற்றிலைப்பாக்கு சிவப்பேற்றி அழகூட்டும் வாய் குங்குமம் துலங்கும் முகம். அவ்வப்போது புல்லுக் கடகத்தை வசதியாக ஏற்ற தலையில் தொப்பியாக ஒரு ஓலைப்பெட்டி. அம்மா முதல் எம் எல்லோருக்கும் அவ சுந்தரப்பெரியாச்சி. அவருக்கு ஒரு கொடுக்கும் கணவர் வேலாயுதம் அப்பு. நிறைவாக ஒத்துழைப்போடு சகோதர சகோதரியர்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே லண்டன் வந்துவிட்ட சுந்தரப் பெரியாச்சியின் மகனை பத்து ஆண்டுகளுக்கு முன்னர் "ஜோ" அக்காவின் கணவராக கண்டேன். சக்கர நாற்காலி பயணம். சற்றும் தளராத மனத்திடம். ஊர் சுற்றும் உறவு என்று அன்போடு அணைக்கும் போக்கு. "உறவுகளின் ஒன்று கூடல்" என எம் உறினர்கள் இணையும் ஆண்டு நிகழ்வுகளுக்கும் தவறாது வருகின்ற ஒத்துழைப்பு தருகின்ற தன்மை இவற்றுக்கு அவருக்கு ஒத்துழைக்க அன்பான மனைவி, பிள்ளைகள் ராம், பிரசாந் ஆகியோர்.

ஊரில் மாறாத பற்று உணர்வை கொண்டவகையிலும் உறவுகள் நண்பர்களை தொடர்பு கொண்டு உறவாடி மகிழ்வதிலும் தமக்கு நல்லதொரு நண்பர் வட்டத்தை வெவ்வேறு இனத்தவரோடும் ஏற்படுத்திக் கொண்ட சிறப்பிலும் மூர்த்தி அண்ணரின் பெருமையை இறுதி ஊர்வலத்தில் பார்த்தோம். "எங்கள் உறவுகள்" "எங்கள் பன்னாலை ஊர்", "எங்கள் ஈழநாடு" என்ற எண்ணத்தையும் உணர்வையும் தன் பிள்ளைகளுக்கும் ஏற்படுத்தியுள்ளது அவர் பெரும் சிறப்பு. அவருக்கு துணையாகவும் பலமாகவும் துலங்குகின்ற அவர் காதல் மனையான "ஜோ அக்கா" வளம் வாழ்வு வாரிசுகள் உறவு வட்டம் எல்லாமே அவர் சிறப்பின் அடையாளங்கள் தானே!

***பாவை ஜெயபாலன்***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## In Appreciation of Velayutham Thiruganasampantha Moorthy

It was my good fortune that I was destined to meet V T S Moorthy (Sam) shortly after I arrived in London as a law student. Very soon we foged a close friendship and when I was ready to embark on my Professional carrer it was he who introduced me to his dear solicitor friend James Pyke. That was the beginning of a partnership which has lasted thirty long and happy years. I am ever so greateful to Sam for playing such vital role in my destiny.

He was a great benefactor of the firm and found immense joy in introducing new clients whether they be his friends and relatives or business associates. He was proud to be a part of the firm.

What brought him even closer to me was his sincerity, compassion, generosity as well as his tranquil demeanour with a deep sense of duty to help his countrymen who arrived in this country helpless and destitute. He made his life into an art of loving and helping. These were hallmarks of his character.

I will always remember him as the most sincere and genuine friend, smart, tall, handsome, always impeccably dressed, soft in speech always smiling with a dimple on his cheek and warmth in his heart.

His sad passing is a great loss not just to his dear wife Joe and sons Ram and Prasanth but to all of us who had the privilege of knowing him, a rare breed held in high esteem. He was a man of dignity, honour and integrity who was truly a man in a million... We deeply mourn his loss and will always honour his memory which will remain evergreen.

**" May God grant him eternal rest."**

***Louis Tambinayagam***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பனின் மாலை

கணக்கான கணக்காளராய் கல்வி கற்று
பணக்கார வாழ்வெய்தி பணிபுரிந்து - கம்பனி
பிணக்கான நிலையெல்லாம் சமூகமாக்கி
மணமிகு மலரானாய் சம்பந்தா - மறக்கலாமோ!

......*தியாகன்*

*M. Thiagarajan*
*24 Brook Avenue*
*Edgware*
*Middx.*
*HA8 9XE*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***Respected Aunty, Ram and Prashanth,***

I was shocked to hear the news of sudden demise of Moorthy uncle.

I have seen him since my younger ages. He was a very kind person. Though Almighty was not kind to him in giving a perfect health, he still continued to be a kind person with the support of a loving family which God blessed.

You have tried your best in taking good care of him, which I've seen personally. This by itself is the best form of service to the Lord. I seek His blessings and we shall see and feel Uncle through Jo Aunty.

My family, musicians and friends join me in expressing their condolences.

MY HEARTFELT DEEPEST CONDOLENCES TO YOU AND YOUR FAMILY.

I shall talk to you very soon.

Sincerely yours,
**Dr. Sirkali Siva Chidambaram**
**24/9/06**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# V.T.S. Moorthy - An appreciation

V.T.S. Moorthy was born and brought up in Sri Lanka and came to London in 1963. He was an accountant. I came to know Moorthy in 1976. He was the searcher after Truth and very devoted to Bhagawan Sri Sathya Sai Baba. In 1980 he was an office bearer of Wimbledon Sai Centre and in the year 1992 became president of the Centre.

During my association with Moorthy I found he was truly a Sai Baba devotee, greatly loved and admired by all who knew him. He was a friend and confidant of many. They in return valued his wisdom, judgement and treasured the integrity which underlay everything he did. He lived a life of a spiritual aspirant, wise but humble, honest and hard working. He believed in living and working together and achieving noble goals. He put into practice Swami's teachings.

Moorthy was always approachable, ready to help others, soft spoken and determined to do what was right. I valued his friendship which extended over three decades and he will be held in great esteem by all Sai devotees who knew him.

A glowing tribute was paid to Moorthy at the London Sai Satsang which was held in Mill Hill on Saturday, the 7th October 2006.

***Rajes Sivayogan***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Velautham Thirugnanasambandamoorthy

Affectionately and lovingly called by friends, relations and everyone associated with him as Moorthy. The Moorthy with a permanent smile dancing on his face, decorating his personality, moved actively all the time; activating his way of life in accordance with the sayings of Swami: "Activity is the Universal Law" and "Help ever hurt never".

He was a friend to all, a friend indeed to many. He did not confine himself in helping only friends, but also relatives and relations of relatives too. His magnanimity, sagacity, far sight and foresight with the awareness to help and see happiness among people made him very popular, prosperous, prominent and loveable. If only every village in Sri Lanka like Pannalai had produced a Moorthy, the country would be a paradise to live with joy and contentment.

Moorthy started life in Government service, at Sri Lanka, but he had dreams of a higher magnitude. There is a saying "The tree is known by the sapling". Initially he had the urge and earnest to go to UK for higher education and help providentially came in the form of Mr. K.C. Nythiananda, the prominent trade union President, with whom Moorthy was very closely associated and evolved to be a man of excellence and honoured his friendship till his demise. A grand reciprocal episode to emulate.

Perseverance and faith in Bhagawan Baba made Moorthy to overcome obstacles and attain his objectives with ease and grace. He also had his share of trials and tribulations of life in his various ventures when he partnered with British Caledonian charter flights and as an entrepreneur in investments in California and the continent. Of course he has had Bhagawan's blessings in abundance. Many are called and few are selected. Swami allocated an apartment in the circular buildings constructed within the sanctum sanctorum of the Prashanti Nilayam to Moorthy and Joe. An act of grace by Swami with His blessings.

The duty incumbent of a householder he performed with perfection as told by Thevar in Thirukural. One who is worthy of the name 'householder' should be a constant caring provider to all members of the house, parents, children and spouse. It is his noblesse oblige to support fittingly the good life and comfort of this homely trinity.

This above all the wisdom of Kural was for the father to educate the children inculcating educare for them to be in the assembly of the wise. This Moorthy with the solemn support of Joe his shakthi in life has accomplished with admiration by grooming Ram in the art of medicine to follow the teachings of Sri Dhanvanthri, the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Lord of medicine and Prashanth, to follow the guidance of the celestial accountant as a proud product of the London School of Economics. These they achieved with the devotional prayer and initiation of Aum, by the Divine hands of Bhagawan Baba.

Another incident to reinforce his love and faith in Swami was revealed and witnessed during his last pilgrimage to Swami for dharshan at Kodaikanal. To go for dharshan of Swami in the morning, in that misty weather at Kodaikanal with his limited power of movements was impossible. It is here the intuitive faculty of the woman superseding the reason of man became evident when Joe decided to take him to the entrance of the Kodaikanal Nilayam after the normal dharshan hours. At that very moment to the surprise of everyone Swami appears in His car to give dharshan and drove away

The omnipotent, omniscient Lord's action enacted by the final proof of the faith and confidence of His devotee Moorthy. The devotion latent in Moorthy became obvious and the merging has taken place then and there.

On exhausting certain trails of Prarrapthwa Karma Moorthy has merged with the Moorthy of Moorthies – the Cosmic Brahmam in moksha.

May we remember him and cherish his memory till memory lasts.

Aum Lokha Samastha Sukhino Bhavanthu
Aum Lokha Samastha Sukhino Bhavanthu
Aum Lokha Samastha Sukhino Bhavanthu
Aum Shanthi Shanthi Shanthi

Ram Bala Balasundram
Canada



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aum Muruga

# BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST

ESTABLISHED 1974, REGISTERED CHARITY NO: 269067

## HIGHGATEHILL MURUGAN TEMPLE

200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508

*Email:admin@highgatehillmurugan.org* *Website:highgatehillmurugan.org*

**Executive Committee**
(Advisory Council)

**Chairman:**
Mr. K. Ranganathan

**Secretary:**
Mr. M. Perinpanathan

**Asst.Treasurer:**
Mr. R. Vimalendran

**Construction Committee**

**Vice Chairman**
Mr. C. Canagasundaram

**Asst. Secretary:**
Mr. S. Sothilingam

**Membership Committee**

**Vice Chairman:**
Mr. T. Kangeyan

**Asst.Secretary:**
Mr. L. Dhayalan

**Religious & Education Committee:**

**Vice Chairman:**
Mr. M. Srikantha

**Asst.Secretary:**
Mr. V. Sabaratnam

**Social & Cultural Committee:**

**Vice Chairman:**
Mr. S. Thanabalasingam

**Asst.Secretary:**
Mr. P. Sanjivi

**Committee Members:**
Mr. N. Balasubramaniam
Mr.K. Desscan
Mr. S. Kesavan
Mr. V. Kiritharan
Mr. S. Subramaniam
Mr. M.Vivekananthan

**BOT Secretary:**
Mr.A.Vairavamoorthy

**BOT Treasurer:**
Mr.K.Nithiananthan

**Temple Manager:**

26th September 2006

Mrs. Moorthy & Family
150A Sandy Lane
South Wallington
Surrey

Dear Mrs. Moorthy & Family,

We learnt with great sadness and shock, the loss of your beloved Husband recently.

We would observe a minute silence for the departed soul to rest in peace at our Advisory Council Meetings. A few words about his & your family's valuable contribution & support to our Temple would be remembered.

He had been a great asset to our Temple and we will all miss him badly.

Please accept this letter as our initial expression of condolences.

Ohm Shanthi! Ohm Shanthi!! Ohm Shanthi!!!

Yours sincerely,


M. Perinpanathan
Secretary
For & on behalf of the Members of the Advisory Council

**BANKERS:**Nat West Bank plc, Barclays Bank plc, State Bank of India **Solicitor:** M/S Wimal & Co



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE FAMILY TREE






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*If you approach one step nearer to me.*
*I shall advance three steps towards you.*
*I am happiest when a person carrying a heavy load of misery comes to me, for he is the most in need of what i have.*

*Aum Shanthi*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Thank you……

The family members of the late Mr V.Thirugnana Sambantha Moorthy (VTS Moorthy) extend their heart-felt appreciation and sincere thanks to one and all, who attended the funeral, who sent mes sages of sympathy and words of comfort, floral tributes and for all their support during the time of grief.

Most importantly they extend their grateful thanks to all the relatives and friends, who extended their hands in help and support during these very traumatic days.

*'Sai Jyothi'*
*150A Sandy Lane South*
*Wallington*
*Surrey SM6 9NR*
*Tel: 0208 669 8161*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org